(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
11 சைவசமய பாடப்பரீட்சை : 2025
தரம் பதினொன்று



www.nselva.com

காலம் அளவு	2.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. ஆன்மாக்களை மல பந்தத்திலிருந்து முற்றாக நீக்கி அவற்றுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தல்.
   1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்
2. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வது.
   1) ஒப்புரவு 2) வாய்மை 3) அன்பு 4) கல்வி
3. சூரியன் மேட ராசியில் பிரவேசிக்கும் நாள்.
   1) தைப்பொங்கல் 2) தீபாவளி 3) சித்திரை வருடப்பிறப்பு 4) ஆடிப்பிறப்பு
4. கன்னிக்கால் நடப்படும் திசை.
   1) அக்கினிமூலை 2) ஈசானமூலை 3) வாயுமூலை 4) குபேரமூலை
5. யாகங்களின் போது மேற்கொள்ள வேண்டிய சடங்குகளை விளக்குவது.
   1) மந்திரங்கள் 2) பிராமணங்கள் 3) ஆரணியகங்கள் 4) உபநிடதங்கள்
6. திருவதிகை மடத்திலிருந்து திருத்தொண்டு புரிந்தவர்.
   1) திலகவதியார் 2) மங்கையர்க்கரசியார்
   3) ஔவையார் 4) ஆண்டாள்
7. திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் பூட்டப்பட்ட கதவைத் திறக்கப் பாடிய பதிகம்.
   1) 'சதுரம்மறை' 2) 'பண்ணினேர்மொழியாள்'
   3) 'ஒன்று கொலாமவர்' 4) 'மாதர்பிறைக்கண்ணி'
8. திருஞானசம்பந்தரின் குருபூசைத் தினம்.
   1) சித்திரைச்சதயம் 2) ஆடிச்சோதி 3) வைகாசிமூலம் 4) ஆனிமகம்
9. உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலின் ஆசிரியர்.
   1) மெய்கண்டதேவர் 2) உமாபதிசிவாச்சாரியார்
   3) அருணந்தி சிவாசாரியார் 4) மனவாசகம் கடந்தார்
10. விடிவாம் அளவும் விளக்கனையது எனப்படுவது.
    1) ஆணவம் 2) கன்மம் 3) மாயை 4) மூலமலம்
11. சங்கம வழிபாட்டால் வீடு பேறு அடைந்தவர்.
    1) குலச்சிறையார் 2) திருமூலர் 3) பூசலார் 4) திருநீலகண்டர்
12. சுவாமி விபுலாந்தரின் பிரமச்சரியநாமம்.
    1) பிரபோதசைதன்யர் 2) மயில்வாகனம் 3) ஆறுமுகம் 4) சிவாநந்தர்
13. ஆகமமுறையிலும், ஆகமம் அல்லாத முறையிலும் வழிபடப்படுபவர்.
    1) வீரபத்திரர் 2) வைரவர் 3) ஐயனார் 4) சுடலைமாடன்
14. களுதாவளைப்பிள்ளையார் ஆலய விருட்சம்.
    1) வில்வமரம் 2) வன்னிமரம் 3) அரசமரம் 4) கல்லாலமரம்
15. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய இறைவியின் நாமம்.
    1) மாதுமைஅம்பாள் 2) கௌரிஅம்பாள் 3) பூலோகநாயகி 4) பார்வதி அம்பிகை

16. நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கே அமைந்துள்ள கோயில்.
1) வெயிலுகந்தவிநாயகர் கோயில் 2) கைலாசநாதர் கோயில்
3) சட்டநாதர் கோயில் 4) வீரமாகாளி அம்மன் கோயில்
17. இலக்கண சுந்தரி அனுட்டித்த விரதம்.
1) விநாயக சதுர்த்தி 2) விநாயகசஷ்டி
3) கந்தசஷ்டி 4) புரட்டாதிசனி
18. சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிறுவிய முதல் பாடசாலை.
1) மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் 2) யாழ். இந்துக்கல்லூரி
3) வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம் 4) கொழும்பு இந்துக்கல்லூரி
19. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று கூறும் நூல்.
1) புறநானூறு 2) சிலப்பதிகாரம் 3) திருக்குறள் 4) மணிமேகலை
20. சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி.
1) திதி 2) நட்சத்திரம் 3) கரணம் 4) யோகம்
21. உயிர்களது மும்மலங்களையும் நீக்குவதால் திருநீற்றுக்கு ஏற்பட்ட பெயர்
1) இரட்சை 2) பசிதம் 3) ஷாரம் 4) பஸ்மம்
22. ஒருவரின் இறப்பின் பின் ஒரு வருடகாலம் வரையில், ஒவ்வொரு மாதமும் அவர் இறந்த திதியில் செய்யப்படுவது.
1) அந்தியேஷ்டி 2) அஸ்திசஞ்சயனம் 3) மாசிமகம் 4) திவசம்
23. உபாகமங்களின் எண்ணிக்கை.
1) பதினெட்டு 2) இருபத்தெட்டு 3) நூற்றேழு 4) இருநூற்றேழு
24. குங்கிலியக்கலயர் சரிந்த சிவலிங்கத்தை நிமிர்த்திய தலம்.
1) திருப்பனந்தாள் 2) திருக்கடவூர் 3) திருவதிகை 4) திருச்செந்தூர்
25. ஆலயத்தைப் புதிதாக அமைத்து, அங்கு இறைவனைப் பிரதிஷ்டை செய்தல்.
1) அநாவர்த்தனம் 2) ஆவர்த்தனம் 3) புனராவர்த்தனம் 4) அந்தரிதம்
26. திருவருட் பயன் என்ற நூலின் நாலாம் அதிகாரம்.
1) இருண்மலநிலை 2) அருளது நிலை 3) அருளுருநிலை 4) உயிரவை நிலை
27. சரியைநெறி நிற்போர் அடையும் முத்தி.
1) சாமீபம் 2) சாரூபம் 3) சாலோகம் 4) சாயுச்சியம்
28. சன்மார்க்க நெறியில் ஒழுகியவர்.
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
29. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்தியவன்.
1) கஜபாகு 2) புவனேகபாகு 3) துட்டகைமுனு 4) எல்லாளன்
30. விநாயகர் தன் உதரபந்தமாக அணிந்தது.
1) எலி 2) நாகம் 3) மயில் 4) சேவல்
31. சோழமன்னர்களால் சதுர்வேதி மங்கலம் அமையப் பெற்ற ஊர்.
1) மாதோட்டம் 2) கந்தளாய் 3) பதவியா 4) அனுராதபுரம்
32. அரசகேசரிப் பிள்ளையார் அமையப் பெற்ற ஊர்.
1) உரும்பிராய் 2) நல்லூர் 3) நீர்வேலி 4) இணுவில்
33. பறாளைவிநாயகர் பள்ளு நூல் எழுந்த காலம்.
1) போத்துக்கேயர் காலம் 2) ஒல்லாந்தர் காலம்
3) ஆங்கிலேயர் காலம் 4) ஆரியர் சக்கரவரத்திகள் காலம்
34. மாமாங்கப் பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவம் நடைபெறும் நன்னாள்.
1) ஆடிஅமாவாசை 2) ஆடிச்சோதி 3) சித்திராபௌர்ணமி 4) வைகாசி விசாகம்
35. கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய பகுதிகள் அடங்கிய நூல்.
1) தம்மபதம் 2) பிரபந்தம் 3) பகவத்கீதை 4) அபிராமிஅந்தாதி
36. சித்தாமிர்த புட்கரணித் தீர்த்தம் அமைந்த தலம்.
1) களுதாவளைப் பிள்ளையார் 2) நல்லூர்க் கந்தசுவாமி
3) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 4) நயினை நாகபூஷணி அம்மன்
37. சிவபிரானின் ஊர்த்துவமுகம் எனப்படுவது.
1) அகோரம் 2) வாமதேவம் 3) தத்புருஷம் 4) ஈசானம்

மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்க.

சந்தானகுரவர்	இயற்றிய நூல்	குருபூசைத்தினம்
A - மெய்கண்டதேவர்	D - சிவஞானசித்தியார்	G - புரட்டாதி பூரம்
B - அருணந்திசிவாசாரியார்	E - கொடிக் கவி	H - சித்திரை அத்தம்
C - உமாபதி சிவாசாரியார்	F - சிவஞானபோதம்	I - ஐப்பசி சுவாதி

38. பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்றவருடன் தொடர்புடைய தொகுதி.
    1) CFH 2) AEI 3) AFI 4) BDI
39. சகலாகம பண்டிதர் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவருடன் தொடர்புடைய தொகுதி?
    1) BDH 2) BDG 3) AFI 4) CDH
40. கொற்றவன் குடி முதலியார் என்ற பட்டப் பெயரைப் பெற்றவருடன் தொடர்புடைய தொகுதி
    1) CEH 2) CDI 3) BFG 4) AEH

(40 x 1 = 40 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
2. பராபரக்கண்ணி என்ற நூலின் ஆசிரியர் யார்?
3. மகேந்திரபுரியை ஆண்ட அரசன் யார்?
4. முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தவர் யார்?
5. சைவ பரிபாலன சபை வெளியிட்ட பத்திரிகையின் பெயர் யாது?
6. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?
7. கடி ஸ்நானம் ஆவது யாது?
8. ஸ்நானத்துக்குப் பின் யாது செய்தல் வேண்டும்?
9. எப்போது எழுந்து விடல் வேண்டும்.
10. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனம் செய்தல் ஆகாது?

(10 x 1 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

ஆ "மீளா அடிமை ....."
ஆ. "பாலுக்குப் பாலகன் ....."
இ. "தண்ணளி வெண்குடை ....."
ஈ. "பச்சைமாமலை ....."
5. "தூக்கும் பனுவல் ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களை எழுதுக.

1. "பல்லார் முனியப்பயன் இல ....."
2. "தீயவை தீய பயத்தலால் ....."
3. "மருந்து ஆகித் தப்பா ....."
4. "அற்றார் அழிபசி ....."
5. "ஊருணி நீர் நிறைந்தற்றே ....."

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. "பூதநாயகர் புற்றிடங் கொண்டவர்....." - பெரியபுராணம்

I. தேவாசிரிய மண்டபத்தின் சிறப்புக்கள் யாவை?
II. திருக்கூட்டச் சிறப்பில் கூறப்படும் சிவனாடியார் பெருமைகள் யாவை என விளக்குக.
III. பெரியபுராணம் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.
IV. கந்தபுராணம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
V. கந்தபுராணத்தில் அடங்கி உள்ள காண்டங்களில் எவையேனும் இரண்டை எழுதுக.

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

2. "நீளநினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்" - சுந்தரர் தேவாரம்

I. திருத்தொண்டத் தொகை பாடப்பட்ட சந்தர்ப்பத்தை எடுத்துரைக்குக.
II. சுந்தரர் இழந்து போன கண் பார்வையை மீண்டும் எவ்வாறு பெற்றார் எனக் கூறுக?
III. சுந்தரருக்கும் சேரமான் பெருமாளுக்கும் உள்ள நட்பை விளக்குக.
IV. சுந்தரரின் பெற்றோர் பெயர்கள் யாவை?
V. சுந்தரர் முத்தி அடைந்த தினம் யாது?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. "பிறந்த நாண் மேலும் பிறக்கு நாள் போலுந் துறந்தோர் துறப்போர் தொகை" - திருவருட்பயன்

I. ஆன்மாவின் இயல்புகள் யாவை?
II. மூவகை ஆன்மாக்கள் யாவர்? அவற்றுக்கும் மும்மலங்களுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.
III. சித்தாந்த அட்டக நூல்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.
IV. ஆணவமலம் சகசமலம் எனப்படுவது ஏன்?
V. பதியின் இருவகை இலக்கணங்கள் யாவை?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

4. "நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லுதமிழ் எங்கே" - சி. வை. தாமோதரம்பிள்ளை

I. ஆறுமுக நாவலரின் பிரசங்க முறை பற்றிக் கூறுக.
II. நாவலரின் கல்விப்பணிகள் பற்றி விபரிக்குக.
III. நாவலர் ஆற்றிய சமூகப்பணிகள் யாவை?
IV. நாவலரின் குருபூசைத் தினம் யாது?
V. நாவலர் நிறுவிய அச்சகத்தின் பெயர் யாது?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

5. எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

I. தீட்சை
II. மார்கழித் திருவாதிரை
III. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
IV. சைவ விழுமியங்களில் வாய்மை

(2 x 5 = 10 புள்ளிகள்**)**